FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(~~Under Section 154 Cr.P.C.~~)
(~~குந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்~~)

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8108577

C

1. District : Chennai | PS: V2AC, CC-V | Year: 2026 | FIR No.: Cr.No.01/2026/AC/CC-V | Date: 10/06/2026
   மாவட்டம் | காவல்நிலையம் | ஆண்டு | மு.த.அ. எண் | நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corrupti | Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: tion Act 1988 as | Sections பிரிவுகள்: 12.
   (iii) Act சட்டம்: Amended by 2018 | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : | Date from : | Date to :
   குற்ற நிகழ்வு நாள் 04.06.2026 | நாள் முதல் | நாள் வரை
   Time Period : | Time from : 15.30 hrs | Time to : 20.30 hrs
   நேர அளவு | நேரம் முதல் | நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 04.06.2026 | Time : 21.30 hrs
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) | Time :
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | நேரம்

4. Type of Information : Written/ Oral : written
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Adyar SRO office, TNHB Building, No.10/55, 3rd Floor, LB Road Adyar, Chennai-20.
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : | (b) Address :
   முறைக் காவல் எண் | முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — | District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr.S.Veerabathiran | (b) Father's/ Husband's Name : R.Subbumayal.
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் | தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : | (d) Nationality : | (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு | நாட்டினம் | வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : | Place of Issue :
   வழங்கப்பட்ட நாள் | வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Zonal Deputy Tahsildar | (g) Address : Purasawalkkam Taluk office, Chennai
   தொழில் | முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Tr.T.Prabhu, Mla 37/26, S/o. Jeyaprakasam, Sub registrar, SRO office, Adyar, Chennai 2) Tr.A.Murugan, Mla 55/26, S/o. Arumugam, Office Assistant, SRO office, Adyar 3) Tr.V.Hariram, Mla 35/26, S/o. Valliyappan (Private Individ

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

Discreat Enquiry conducted.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

10/6/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 10.06.2026
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் T. Kandasamy
Rank: நிலை Deputy No. எண் .....
Superintendent of Police, CC-V, DVAC, Chennai

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

FIR CONTENTS IN VIGILANCE AND ANTI CORRUPTION, CHENNAI CITY – V DETACHMENT, CR.NO.01/2026, 7 & 12 OF THE PREVENTION OF CORRUPTION ACT 1988 AS AMENDED BY 2018

இன்று 04.06.2026ம் தேதி இரவு சுமார் 09.30 மணியளவில் திரு.எஸ்.வீரபத்திரன், மண்டல துணை வட்டாட்சியர் புரசைவாக்கம் வட்டாட்சியர் அலுவலகம், சென்னை-3 அவர்களிடமிருந்து ந.க.எண்.98/INSP/2026, Dated 04.06.2026 ன் அடிப்படையில் காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகர பிரிவு-5, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-16 அவர்களிடம் அளிக்கப்பட்ட புகார் மனுவின் சுருக்கம் பின்வருமாறு : சென்னை மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் சென்னை நகர பிரிவு-5, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இன்று 04.06.2026-ம் தேதி சென்னை திருவான்மியூர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய கட்டிடம் எண்.10/55 L.B. சாலையில் மூன்றாம் தளத்தில் இயங்கிவரும் அடையார் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கையின் போது மேற்படி அலுவலகத்தில் கணக்கில் வராத பணம் ரூ.56,130/- (ரூபாய் ஐம்பத்தி ஆறாயிறத்து நூற்றி முப்பது மட்டும்) மற்றும் 1. தொகுதி வருகை பதிவேடு, 2. DEO பணியாளர் வருகை பதிவேடு, 3. தனிநபர் பண இருப்பு பதிவேடு, 4. 04.06.2026 பதிவான பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் அறிக்கை ஆகிய ஆவண சான்றொப்பமிட்ட நகல்கள் கைப்பற்றப்பட்டது. மேலும் இந்த கூட்டுத் தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மற்றும் 1.ஜெ.பிரபு, சார் பதிவாளர், 2. ஆர். நர்மதா, உதவியாளர், 3. ஏ. முருகன், அலுவலக உதவியாளர், 4. மா. அன்புசாமி, டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர், 5. எஸ். ஜெயசந்திரன், கேமரா ஆப்பரேட்டர், 5. ஏ. காந்தி, கண்காணிப்பாளர் (பத்திரபதிவு அலுவலகம்) ஆகியோரிடம் பெறப்பட்ட வாக்குமூலங்கள் உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது. மேற்படி கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மீது

எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். புகார் பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்க வேண்டுகிறேன் (ஒப்பம் xxxxxxxxxx திரு.எஸ்.வீரபத்திரன்) மண்டல துணை வட்டாட்சியர் புரசைவாக்கம் வட்டாட்சியர் அலுவலகம், சென்னை - 3. **கூட்டு திடீர் தணிக்கை அறிக்கை :** சென்னை அடையார் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரபதிவு மற்றும் பத்திரப்பதிவு சம்மந்தப்பட்ட அலுவல்களுக்கு வரும் பொதுமக்களிடம் மேற்படி சென்னை திருவான்மியூர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய கட்டிடம் எண்.10/55 L.B. சாலையில் இயங்கிவரும் மேற்படி அடையார் சார்பதிவாளர் அலுவலக ஊழியர்கள் லஞ்ச பணம் கேட்டு பெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் சென்னை ஆய்வு குழும அலுவலருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மேற்படி தெரிவிக்கப்பட்ட தகவலின் பேரில் சென்னை ஆய்வு குழும அலுவலர் அடையார் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் கூட்டு தணிக்கை மேற்கொள்ள திரு.எஸ்.வீரபத்திரன், மண்டல துணை வட்டாட்சியர் புரசைவாக்கம் வட்டாட்சியர் அலுவலகம், சென்னை - 3 என்பவரை இன்று 04.06.2026ம் தேதி நியமனம் செய்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை நகரப்பிரிவு அலுவலகத்திற்கு அனுப்பிவைத்ததில் மேற்படி திரு.வீரபத்திரன் காலை சுமார் 10.00 மணியளவில் சென்னை நகரப்பிரிவு 5ன் காவல் துணைகண்காணிப்பாளர் முன்னிலையில் ஆஜர் ஆனார். மேற்படி திரு.வீரபத்திரன், காவல் துணைகண்காணிப்பாளர் திரு.டி.கந்தசாமி, சென்னை சிறப்பு நகரப்பிரிவு 3ன் காவல் ஆய்வாளர் திருமதி.விமலா மற்றும் காவல் ஆளிநர்கள் சகிதம் இன்று 04.06.2026 மதியம் சுமார் 02.30 மணியளவில் அரசு வாகனத்தில் புறப்பட்டு மதியம் சுமார் 03.15 மணியளவில் அடையார் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சற்று தொலைவில் வாகனம் நிறுத்தப்பட்டது.

2) மேற்படி அடையார் சார்பதிவாளர் அலுவலகம் திருவான்மியூர் எல்.பி. சாலையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய கட்டிடத்தின் மூன்றாம் தளத்தில்

அமைந்துள்ளது. மேற்படி திடீர் கூட்டு தணிக்கை குழுவினர் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தை கூட்டு தணிக்கை செய்ய இந்த கட்டிடத்தின் தரை தளத்தில் உள்ள மின்தூக்கி அருகே வந்தபோது சந்தேகத்திற்கு இடமாக ஒரு நபர் நின்று கொண்டிருந்தார். மேற்படி நபரை விசாரித்தபோது தனது பெயர் அரிராம் த.பெ.வள்ளியப்பன் என்றும் கூறினார். மேலும் விசாரித்தபோது அடையார் சார்பதிவாளரை பார்க்க வந்திருப்பதாகவும், மேலும் சார்பதிவாளருக்கு உணவு மற்றும் தேநீர் வாங்கி கொடுக்க வந்திருப்பதாகவும், முன்னுக்கு பின் முரணாக பதில் கூறினார். மேற்படி அரிராம் மீது சந்தேகம் வந்ததால் அவரை அழைத்துகொண்டு அடையாறு சார்பதிவாளரை அடையாளம் காட்டும்படி திடீர் கூட்டு தணிக்கை குழுவினர் கேட்டுகொண்டதின் பேரில் அவர் மின்தூக்கி மூலம் இந்த கட்டிடத்தின் நான்காம் தளத்திற்கு அழைத்து சென்றார். ஆனால் நான்காவது தளத்தில் எந்த அலுவலகமும் காணப்படவில்லை, ஆனால் அடையார் சார்பதிவாளர் அலுவலகம் மூன்றாவது தளத்தில் தெற்கு பகுதியில் அமைந்துள்ளது. அடையார் சார்பதிவாளர் அலுவலகத்தின் வரவேற்பு மற்றும் பொதுமக்கள் காத்திருப்பு அறை வடக்கு பகுதியில் அமைந்துள்ளது. அடையார் சார்பதிவாளர் அலுவலகம் பயோமெட்ரிக் முறையில் கதவுகள் திறப்பது அமைந்திருந்ததால் மேற்படி சார்பதிவாளரிடம் சைகை மூலம் கேட்டுகொண்டதால் அலுவலக கதவு திறக்கப்பட்டது.

3) திடீர் கூட்டு தணிக்கை குழுவினர் அலுவலகத்திற்கு உள்ளே சென்று அடையார் சார்பதிவாளரிடம் தங்களை அறிமுகம் செய்தனர். சார்பதிவாளர் குறித்து விசாரித்தபோது தனது பெயர் ஜெ.பிரபு என்றும் தான் 12.09.2025 முதல் கும்மிடிபூண்டி சார்பதிவக அலுவலகத்திலிருந்து அயல்பணியாக (டெபுடேஷன்) அடையார் சார்பதிவகத்தில் சார்பதிவாளராக பணிசெய்வதாகவும் தெரிவித்தார். மேற்படி திடீர் கூட்டு தணிக்கை குழுவினர் மதியம் 03.30 மணி முதல் மேற்படி அடையார் சார்பதிவக அலுவலகத்தை சோதனை செய்ய தொடங்கினர்.

4) மேற்படி திடீர் கூட்டு தணிக்கையின்போது அரிராம் என்பவரை சோதனை செய்ய அவர் தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து கொத்தாக ஆஜர் செய்த பணத்தை எண்ணி பார்த்தபோது அதில் ரூ.43,430/- காணப்பட்டது. அந்த பணம் குறித்து கேட்டபோது அவர் தான் கடந்த 9 மாதமாக அடையார் சார்பதிவாளர் திரு.பிரபு அவர்களுக்கு உணவு மற்றும் தேநீர் வாங்கி கொடுப்பது மற்றும் அவர் தனிப்பட்ட வேலைகளை அதாவது டாக்குமென்ட ரைட்டரிடமிருந்து சார்பதிவாளருக்கு பணம் வசூல் கொடுப்பது போன்றவைகளை செய்து கொடுப்பதாகவும், அதே போல் இன்று 04.06.2026 மதியம் சுமார் 15.30 மணியளவில் வசூல் செய்த லஞ்ச பணத்தை சோதனை செய்தபோது திடீர் கூட்டுத் தணிக்கை குழுவினரிடம் ஒப்படைத்ததாக கூறினார். மேலும் அவரது இருசக்கர வாகனத்தை சோதனை செய்தபோது ரூ.4000/- கைப்பற்றப்பட்டது. அந்த பணம் குறித்து கேட்டபோது இப்பணமானது லஞ்சமாக வசூல் செய்து சார்பதிவாளருக்கு கொடுப்பதற்காக வைத்திருந்ததாக கூறினார். ஆகமொத்தம் ரூ.47,430/- இன்றைய (04.06.2026) பத்திரபதிவிற்காக வழங்கப்படும் டோக்கனுக்கான லஞ்ச பணமாகும். மேற்படி அரிராம் தான் தினமும் வசூல் செய்த லஞ்ச பணத்தை சார்பதிவாளர் திரு.பிரபு அவர்களிடம் அலுவலகம் பணிமுடித்து செல்லும்போது சார்பதிவாளர் அலுவலக கீழ்தளத்தில் கொடுப்பது வழக்கமாகும் என்று தெரிவித்தார்.

5) மேற்படி திடீர் கூட்டு தணிக்கையின்போது சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளர் திரு.முருகன் த/பெ.ஆறுமுகம் என்பவரின் மேஜையின் வலது பக்கத்தின் கீழே ஓரத்தில் கொத்தாக கிடந்த பணத்தை எடுத்து எண்ணி பார்த்ததில் அதில் ரூ.3200 மற்றும் அவரது மேஜையில் இருந்த பதிவேட்டில் ரூ.1000 இருந்தது, இது குறித்து அவரிடம் கேட்டபோது தனக்கு அதைபற்றி எதுவும் தெரியாது என கூறினார். மேலும் அவரது இருக்கைக்கு பின்னால் இருந்த ரேக்கில்

இருந்த பதிவேட்டில் ரூ.4500/- இருந்தது, அதைப்பற்றியும் தனக்கு எதுவும் தெரியாது என கூறினார்.

6) மேற்படி சார்பதிவாளர் அலுவலக தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் ஆய்வு மேற்கொண்டதில் 04.06.2026 அன்றைய கீழ்கண்ட அலுவலர்கள் தங்களது சொந்த பணம் இருப்பாக கீழ்கண்ட தொகையினை குறிப்பிட்டுள்ளனர்.

வ.எண்.	பெயர், பதவி	தனிநபர் பண இருப்பு பதிவேட்டு தொகை	சோதனையின் போது காணப்பட்ட தொகை
1.	ஜெ.பிரபு, சார் பதிவாளர்	1500/-	1500/-
2.	ஆர். நர்மதா, உதவியாளர்	1600/-	1600/-
3.	ஏ. முருகன், அலுவலக உதவியாளர்	1500/-	1500/-
4.	மா. அன்புசாமி, டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர்	2650/-	2650/-
5.	எஸ். ஜெயசந்திரன், கேமரா ஆப்பரேட்டர்	300/-	3880/-
6.	ஏ. காந்தி, கண்காணிப்பாளர் (பத்திரபதிவு அலுவலகம்)	2192/-	2192/-

7) கேமரா ஆப்பரேட்டர் எஸ்.ஜெயசந்திரன் என்பவர் தனி நபர் பண இருப்பு பதிவேட்டில் குறிப்பிட்ட தொகையை விட கூடுதலாக ரூ.3580/- வைத்திருந்தார் அதுகுறித்து கேட்டபோது தனது மனைவியின மருத்துவ சிகிச்சைக்காக வைத்திருப்பதாக கூறினார். மேற்படி எஸ்.ஜெயசந்திரன் எல்காட் நிறுவனம் மூலம் அடையார் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் ஒப்பந்த பணியாளர் ஆவார். இவருக்கு இந்த அலுவலகத்தில் தனது அலுவல் நிமித்தமாக லஞ்சம் கேட்டுபெறுவதற்கான வாய்ப்பு இல்லாததால் மேற்படி பணம் குறித்து அவர் கூறிய விளக்கம் ஏற்கப்பட்டு அவரிடமே அப்பணம் திரும்ப வழங்கப்பட்டது. இந்த திடீர் கூட்டு தணிக்கையின்போது அடையார் சார்பதிவாளர் அலுவலகத்தில் கீழ்கண்ட

ஆவணங்கள் நகல் எடுக்கப்பட்டு சார்பதிவாளர் திரு.ஜெ.பிரபு அவர்களிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

வ.எண்.	ஆவணங்களின் பெயர்	தாள்களின் எண்ணிக்கை
1.	தொகுதி வருகை பதிவேடு	3
2.	DEO பணியாளர் வருகை பதிவேடு	2
3.	தனிநபர் பண இருப்பு பதிவேடு	1
4.	04.06.2026 பதிவான பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் அறிக்கை	2

8) இந்த கூட்டு தணிக்கையின்போது அடையார் சார்பதிவக அலுவலகத்தில் பணியில் இருந்த கீழ்கண்ட நபர்களிடம் வாக்குமூலம் திரு.வீரபத்திரன் என்பவர் மூலம் பெறப்பட்டது.

வ.எண்.	பெயர் மற்றும் பதவி
1.	ஜெ.பிரபு, சார் பதிவாளர்
2.	ஆர். நர்மதா, உதவியாளர்
3.	ஏ. முருகன், அலுவலக உதவியாளர்
4.	மா. அன்புசாமி, டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர்
5.	எஸ். ஜெயசந்திரன், கேமரா ஆப்பரேட்டர்
6.	ஏ. காந்தி, கண்காணிப்பாளர் (பத்திரபதிவு அலுவலகம்)
7.	வ.அரிராம், தனிநபர்
8.	தே.காமராஜ், தனிநபர்
9.	ஆர்.பாலசுந்தரம், அலுவலக உதவியாளர் (ஓய்வு)

9) மேற்படி இருதுறை கூட்டு திடீர் தணிக்கை இன்று 04.06.2026ம் தேதி இரவு 08.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்ததணிக்கையின்போது பொது மக்களுக்கோ அல்லது சார்பதிவக பணிகளுக்கோ எந்த இடையூறும் ஏற்படுத்தப்படவில்லை. இந்த கூட்டுதணிக்கையின்போது ரூ.56,130/- கணக்கில் வராத பணம் விசாரணைக்காக

கைப்பற்றப்பட்டுள்ளது. Sd/-xxx திரு.எஸ்.வீரபத்திரன், மண்டல துணை வட்டாட்சியர் புரசைவாக்கம் வட்டாட்சியர் அலுவலகம், சென்னை - 3, Sd/-xxx திரு.தி.கந்தசாமி, காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகரப்பிரிவு-5, ஊதக துறை, சென்னை-16, Sd/-xxx திருமதி.கோ.விமலா, காவல் ஆய்வாளர், சிறப்பு நகர பிரிவு-5, ஊதக துறை, சென்னை, Sd/-xxx திரு.ஜெ.பிரபு, சார் பதிவாளர், அடையாறு.

Honored sir received the above complaint on 04.06.2026 at 21.30 hrs. A discrete enquiry was caused against 1) Tr.J. Prabhu, S/o.Jayaprakasam, i/c Sub-Registrar, O/o the Adyar SRO, L.B. Road, Adyar, Chennai – 600020, 2) Tr.A.Murugan, Office Assistant, O/o the Adyar SRO, L.B. Road, Adyar, Chennai – 600020 and 3) Tr.V.Hariram S/o.Valliyappan (Private Individual) and confirmed about the corrupt activities. After getting oral orders from superior officers today 10.06.2026 at 18.00 hrs. a case in Cr.No.01/2026/AC/CC-V, u/s.7 & 12 of Prevention of Corruption Act, 1988 as amended by 2018 was registered and took up investigation. The original FIR along with the

1. Complaint vide நக.எண். 98/INSP/2026, Dated 04.06.2026
2. Proceedings drawn by Tr.S. Veerabadhiran, Deputy Inspection Cell Officer during joint surprise check on 04.06.2026 between 15.30 hrs. to 20.30 hrs.

10/6/2026

Deputy Superintendent of Police,
Chennai City – V,
Vigilance and Anti-Corruption,
Alandur, Chennai – 16.